1981 மார்ச் 31]

கொல்லிமலையில் பால்மாடு வளர்ப்பு பண்ணை ஏற்படுத்தும் திட்டம்.

*வினா எண். 578—திரு. சி. சிவப்பிரகாசம்: மாண்புமிகு சமூகநலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கொல்லிமலையில் அரசின் சார்பில் பால்மாடு வளர்ப்புப் பண்ணை ஒன்று ஏற்படுத்த அரசிடம் திட்டம் உள்ளதா?

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன்: கொல்லிமலையில் அரசின் சார்பில் பால்மாடு வளர்ப்புப் பண்ணை ஒன்று ஏற்படுத்த அரசிடம் திட்டம் ஏதுமில்லை.

திரு. சி. பழனிமுத்து: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கொல்லிமலையில் தழை நிறைந்த காடுகள் உள்ளன. ஆகவே, அங்கே பால் மாடு வளர்ப்புப் பண்ணை ஏற்படுத்த அரசு பரிசீலனை செய்யுமா? அதன் மூலம் அங்கேயுள்ள ஏழை எளிய மலை வாழ் மக்கள் வாழ்வு பெறுவதற்கு வசதி அளிக்க முடியும் என்பதால், அந்தத் திட்டத்தை அரசு மீண்டும் பரிசீலிக்குமா?

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நமது மாநிலத்தில் ஏற்கனவே உள்ள பண்ணைகளில் பாசன வசதிகள் மற்றும் உள் அமைப்பு வசதிகள் இல்லாத காரணத்தால், பசுந்தழை பயிர் உற்பத்திக்கும், தீவன உற்பத்திக்கும் அரசு மிகுந்த கவனம் செலுத்த வேண்டியிருப்பதால் பல சிரமங்கள் இருக்கின்றன. ஏற்கனவே உள்ள பண்ணைகளைப் பராமரிக்க அவற்றில் இருந்து கிடைக்கும் வருமானத்தை விட 3 பங்கு செலவு அதிகமாகிறது. ஆகவே, கொல்லிமலையில் பால்மாடு வளர்ப்புப் பண்ணை ஏற்படுத்தும் திட்டம் அரசின் பரிசீலனையில் இல்லை.

திரு. சேலம் மு. ஆறுமுகம்: தலைவர் அவர்களே, சேலத்தில் பால் பவுடர் தொழிற்சாலை ஆரம்பிக்க இருப்பதால், ரெட்டேன், ஜெர்சி, பெர்சியன் போன்ற மாடுகளை வளர்க்க ஏற்காட்டில் ஒரு பண்ணை அமைக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மூலக் கேள்வி கொல்லி மலை பற்றியது.

வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு:— ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால், அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]